மேல் முறையீடு

**நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்ய விரும்பினால் நான் என்ன செய்ய வேண்டும்?**

(a) மேல் முறையீடு செய்வதற்கான காலக்கெடு முடிவதற்கு குறைந்த பட்சம் 5 நாட்களுக்கு முன் நீங்கள் மன்றத்தை அனுகவேண்டும். மேலும், நீங்கள் மேல் முறையீடு செய்வதற்கான காரணம் வலுவாக இருக்க வேண்டும்.

(b) மன்றம் உங்கள் சார்பில் மேல் முறையீட்டு அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமா என்பது உங்களுக்குத் தெரிவிக்கப்படும். மன்றம் உங்கள் சார்பில் அறிவிப்பை தாக்கல் செய்தாலும், சட்ட உதவி வழங்கப்படுமா என்பதை சட்ட உதவிக்குழு முடிவு செய்யும்.

(c) மேற்கண்டுள்ள (a) குறிப்பில் உள்ள நிபந்தனைகளுக்கு நீங்கள் உட்படவில்லையென்றால், மேல் முறையீட்டு அறிவிப்பை நீங்கள் தனிப்பட்ட முறையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

**தனிப்பட்ட முறையில் நான் மேல் முறையீட்டு அறிவிப்பை தாக்கல் செய்தால், நான் சட்ட உதவி பெற மனு செய்யலாமா?**

ஆம் மனு செய்யலாம். ஆனால், உங்களுக்கு சட்ட உதவி வழங்கப்படும்வரை, நீதிமன்றம் குறிப்பிட்ட நேரவரையறைகளுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

Version: Accurate as of 15 November 2012

குறிப்புகள்:

LEGAL AID BUREAU

நான் சட்ட உதவிக்கு விண்ணப்பிக்கும் போது தெரிந்துகொள்ள வேண்டியவை என்னென்ன?

பொதுவான தகவல்

**நான் சட்ட உதவிக்கு தகுதி பெறுவது எப்படி?**

நீங்கள் வசதித் தேர்விலும் மற்றும் தகுதித் தேர்விலும் தேர்வு பெறவேண்டும். மேலும் தகவலுக்கு, www.lab.gov.sg எனும் இணைய முகவரிக்குச் செல்லவும்.

**எனது வருமானத்திலும் சொத்துக்களிலும் ஏதாவது மாற்றங்கள் இருந்தால், நான் சட்ட உதவி மன்றத்திற்கு தெரிவிக்க வேண்டுமா?**

ஆம், உங்களது சொத்து மதிப்பு அல்லது வருமானம் கூடுதலானால், உங்களுக்கு வழங்கப்பட்ட சட்ட உதவிக்கு மாற்றம் ஏற்படலாம்.

**எனது வழக்கு வலுவாக இருக்கிறதா என்பதை யார் முடிவு செய்வார்?**

உங்கள் வழக்கு வலுவாக இருக்கிறதா என்பதை சட்ட உதவி குழு (சட்ட உதவி இயக்குநர் மற்றும் குறைந்தது 2 தனியார் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட குழு) முடிவு செய்யும்.

**சட்ட உதவி மன்றத்தின் முடிவை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யலாமா?**

மன்றத்தின் முடிவு <u>இறுதியானது</u>. இதை எதிர்த்து நீங்கள் மேல் முறையீடு செய்ய இயலாது.

## சட்ட உதவி வழங்கப்பட்டபின் சட்ட உதவி ரத்து செய்யப்பட வாய்ப்பு இருக்கிறதா?

ஆம், சில நேரங்களில் சட்ட உதவி ரத்து செய்யப்படலாம். உதாரணத்திற்கு:-

- மனுதாரருக்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட்ட பின்னும், அதை நியாயமற்ற முறையில் ஏற்றுக்கொள்ள மறுத்தாலோ;
- மனுதாரருடன் தொடர்பு கொள்ள முடியாமல் போனாலோ;
- மனுதாரரின் சொத்து மதிப்பு மன்றத்தின் எல்லையை மீறினாலோ;
- மன்றத்தின் அலுவலர்களிடமோ அல்லது வழக்கை எடுத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட வழக்கறிஞரிடமோ நியாயமற்ற முறையில் நடந்துகொண்டாலோ;
- மன்றத்துக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்தாமல் போனாலோ

சட்ட உதவி ரத்து செய்யப்படலாம்.

## என் வழக்கை வழிநடத்த நான் எப்படி உதவலாம்?

- தேவையான அணைத்து ஆவணங்களையும் தாமதமில்லாமல் சமர்ப்பிக்கவும்; குறிப்பிடப்பட்ட சந்திப்பு நாளின்போது நேரத்தோடு வரவும்;
- அதிகாரியை சந்திக்க முன் ஏற்பாடு செய்யவும்:
- உங்கள் தொடர்பு விவரங்களில்(*) ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் மன்றத்திடம் உடனே தெரியப்படுத்தவும்;
  *(முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி)
- ஒரு வாரத்திற்கு மேல் வெளிநாட்டுக்கு செல்ல வேண்டியிருந்தால் அல்லது தொடர்புகொள்ள முடியாமல் போனால், மன்றத்திடம் தெரியப்படுத்தவும்.

<u>பண விவகாரங்கள்</u>

## சட்ட உதவி இலவசமானதா?

**இல்லை. மன்றம் செய்த வேலைக்கு நீங்கள் ஒரு <u>கட்டணம்</u> செலுத்த வேண்டும். அத்தொகை எவ்வளவு என்பது பின்னர் தீர்மானிக்கபடும்.**

உங்கள் வழக்கை நடத்த ஆகும் செலவுகளையும் நீங்கள் செலுத்தவேண்டும் (உதாரணங்கள்: பிரதிவாதியிடம் ஆவணங்களை ஒப்படைப்பதற்கான செலவுகள், விளம்பரங்கள், நிபுணர் அறிக்கைகள், மருத்துவ அறிக்கைகள்).

சட்ட உதவி விண்ணப்பத்தை நீங்கள் வாபஸ் செய்தாலும்கூட, நீங்கள் மன்றத்திற்கு செலுத்தவேண்டிய கட்டணத்தை செலுத்தியாக வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணத்தை திரும்பப்பெற இயலாது.

## என் வழக்கின் தொடர்பில் வெற்றிகரமாக மீட்கப்படும் அணைத்து பணத்தையும் நானே வைத்துக்கொள்ளலாமா?

மன்றம் தீர்மானிக்கும் ஒரு தொகையை நீங்கள் மன்றத்திற்கு செலுத்தவேண்டும். இத்தொகை உங்கள் வழக்கின் தொடர்பில் கிடைக்கும் பணத்திலிருந்து கழித்துக்கொள்ளப்படும். எனவே, நீங்கள் உங்கள் வழக்கின் தீர்வுத்தொகையை ஏற்றுகொள்ளுமுன் மன்றத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை கருத்தில் கொள்ளவும்.

<u>நீதிமன்றத்தில் நடைப்பெற்றுக்கொண்டிருக்கும் வழக்கு</u>

## எனது வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருந்து, நான் சட்ட உதவிக்கு விண்ணப்பம் செய்தால், நான் என்ன செய்யவேண்டும்?

சட்ட உதவி மன்றத்தின் வழக்கறிஞரோ அல்லது உங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட வழக்கறிஞரோ உங்கள் சார்பில் நீதிமன்றத்திற்கு செல்வார் என்று உறுதிப்படுத்தப்படும் வரை, நீங்கள் எல்லா நீதிமன்ற விசாரணைகளுக்கும் தனிப்பட்ட முறையில் செல்லவேண்டும். நீங்கள் சட்ட உதவிக்கு விண்ணப்பம் செய்வதாக நீதிமன்றத்தில் தெரிவித்து, உங்கள் வழக்கை ஒத்திவைக்கும்படி கோரவேண்டும். உங்கள் வழக்கு ஒத்திவைக்கப்படுமா என்பதை நீதிமன்றமே முடிவு செய்யும்.

LEGAL AID BUREAU